தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றம்

# எசன் தமிழ்ப்பாடசாலை

*Tamilischer Sprachdienst und Kulturverein e.V.*

# 30வது ஆண்டு மலர்

## ESSENER TAMILISCHE SCHULE
## 30 Jähriges Bestehen



1988-2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sevenar str 1-3 - 45127 Essen /Germany -Tel: 04920189329920 / E-Mail: tamilschoolessen88@hotmail.com

# மன்ற கீதம்

மொழியும் கலையும் கல்வியால் விளங்க
முத்தமிழ்தனை மூச்செனக் கொண்டு இசை
மொழி நடனப் பள்ளிகள் நடத்தும் எசன்
தமிழ்மொழிச் சேவை மன்றம் வாழியவே

பன்மொழி பல்கலை பயில் பண்பாடுகள்
பாவலர் நாவலர் விஞ்ஞானிகள் மலிய
பாடுபடு மெசன் தமிழ் மொழிச்சேவை
கலாசாரமன்றம் வாழ்க வளர்க வாழியவே

உண்மை நேர்மை ஒற்றுமை வேண்டி
ஊக்கம் ஆக்கம் உயர்வதை நாடி
தமிழ்நலம் பொதுநலம் மானுடம் பேணி
தாரணி யதனில் என்றென்றும் வாழியவே

நீள்புவி கோளெங்கும் நீண்டு பருத்து
வாள்போல் கூராய் அறிவை வளர்த்து
வானென உயர்ந்து வரையென நிலைத்து
வரலாறுகள் படைத்து வளத்துடன் வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மன்றம் பற்றிய ஒரு பார்வை

ஒரு இனத்தின் அடையாளங்களில் முதன்மையாக திகழ்வது மொழி. அவ்வாறான மொழியை வளர்ப்பதற்கு பல்வேறு வழிகள் இருந்தாலும் அம்மொழிக்கென ஒரு பாடசாலை அமைத்து அதனை வளர்த்தல் என்பது தனித்துவமானது. இதனை நன்கு உணர்ந்த திரு.திருமதி வேலாயுதம் அவர்கள் எசன் தமிழ் மொழிச் சேவை கலாசார மன்றம் என்பதை நிறுவி அதில் தாய் மொழியை வளர்ப்பதற்கென தமிழ்பாடசாலையும் தமிழர் கலை கலாசாரங்களை பேணுவதற்கு சங்கீத நடன வகுப்புக்களையும் தொடங்கினார்கள். ஒரு சிறு வித்தாக மண்ணில் விழுந்த விதை தற்போது முற்பது வருடங்களை கடந்து பெரு விருட்சமாக வளர்ந்து பரந்து நிற்கின்றது. இதனால் பல நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் மொழி கலை கலரச்சாரங்களில் முன்னிலை அடைந்துள்ளார்கள்.

1988ம் ஆண்டு ஆனி மாதம் 9 மாணவர்களுடன் ஆரப்பிக்கப்பட்ட இப் பாடசாலை காலத்திற்கு காலம் வளர்ச்சி பெற்று வளர்ந்து வருகின்றது. பாலர் வகுப்புபிரிவில் இருந்து 11ம் ஆண்டு வரை மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். இலங்கை தமிழ் பாடநூலினை பாடத்திட்டமாக கொண்டு மாணவர்களிற்கு தமிழ் போதிக்கப்படுகின்றது. அரையாண்டுப் பரீட்சை இறுதியாண்டுப்பரீட்சை என ஆண்டிற்கு இரண்டு பரீட்சைகள் இப்பாடசாலையாலே நடாத்தப்படுகின்றன. சங்கீத, நடன, கலை வகுப்பு மாணவர்கள் சர்வதேச தரம்வாய்ந்த நிறுவனங்களினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பங்கு பற்றி சிறப்புப் பட்டங்களையும் பெற்று வருகின்றனர்.

இம் மன்றத்தின் நிறுவனர்களாகிய திரு. திருமதி. வேலாயுதம் அவர்கள் 2006ம் ஆண்டு வேறுநாடு சென்று வாழவேண்டிய சூழ்நிலை காரணமாக ஒரு நிர்வாக அலகை ஏற்படுத்தி விட்டுச்சென்றனர் புறத்தேயிருந்து புயல்வீசிய வேளையில் மன்றத்தின் மீது கொண்ட பற்றும். அதன் இருப்பின் தேவையையும் உணர்ந்த இப்பாடசாலையின் பெற்றோர்களினால் பாதுகாக்கப்பட்டு, சனநாயகமுறையில் உறுதிமிக்க ஏழு பேர் கொண்ட நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டு சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தற்போது ஒன்பது பேர் ஆசிரியர்களாக கற்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்படசாலையில் கல்விகற்றமாணவர்களும் இணை ஆசிரியர்களாக கடமையாற்றுவதும் பெருமைக்குரியது.

மாணவர்களின் பேச்சுத்திறன்களை வளர்க்க வேண்டும் என்பதற்காக ஆண்டு தோறும் பேச்சு, தமிழ்திறன், சித்திரப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் விளையாட்டுப் போட்டிகளும் ஆண்டுக்கொருமுறை நடாத்தப்படுகின்றன.

எமது கலாசாரத்தை தெரியப்படுத்தும் வகையில் நவராத்திரிவிழா, நத்தார்விழா, தைப்பொங்கல் என்பன மாணவர்களின் நிகழ்ச்சிகளுடன் ஒவ்வொரு முறையும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன.

இவற்றை விட ஜேர்மனியில் நடைபெறுகின்ற பல விழாக்களிலும் பங்கு பற்றிச் சிறப்பித்த இப் பாடசாலை மாணவர்களின் மொழித்திறனையும், கலைத்திறனையும் கண்டுகளித்தவர்கள் பாராட்டத்தவறவில்லை. இவ்வாறு பல சிறப்புக்கள் பொருந்திய எசன் தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றம் தொடர்ந்து பணிகளைச்செய்து இம் இனத்தின் உயர்வுக்கு வழிசமைக்கும் என்றும் எல்லோரும் பக்கபலமாக இருக்கவேண்டுமென வேண்டிக்கொண்டு முப்பதாவது அகவையை கடந்து செல்கின்றது......



"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

.........

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Einführung

Das wichtigste Kennzeichen eines Volkes ist immer die Sprache. Obwohl es viele Wege gibt um eine Sprache zu erlernen, ist es dennoch von Bedeutung eine Sprache auf Schulischen Wege zu lernen. Mit diesem positiven Gedanken haben Herr und Frau Velayutham den Tamilischen Sprachdienst und Kulturverein e.V. gegründet, mit dem sie die tamilische Muttersprache sowohl als auch die Gesangs- und Tanzkultur förderten. Das einst eingepflanzte Samenkorn ist nun nach 30 Jahren zu einem großen Baum herangewachsen. Aus diesem Grund sind mehr als 100 Schüler und Schülerinnen im Bereich der Tanz und Gesangkultur als auch in der Sprache deutlich Fortgeschritten. Die Schule, die zu Beginn im Juni 1988 mit nur neun Schülern eröffnet wurde, erhält nun von Zeit zu Zeit immer mehr Zuwachs. Von den Kleinkindern bis hin zu der elften Klasse lernen die Schüler Tamilisch in der Schule, welches dem gleichen Lernstoff wie im Heimatland entspricht.

Außerdem finden nach jedem Halbjahr des Schuljahres Halbjahres Prüfungen statt.

Schüler den Tanz und Gesangkunst erlernen können mithilfe von Tests und Prüfungen Leistungsurkunden erhalten. Zurzeit gibt es neun Lehrer und Lehrerinnen, die an der Schule unterrichten. Besonders Lobenswert sind die Schüler, die auch nach dem Schulabschluss an dieser Schule als Lehrer dienen und die Kinder unterrichten. Um den Sprachgebrauch zu fördern findet Jährlich ein Sprachwettbewerb inklusive einem Allgemeinwissens Wettbewerb oder für die kleineren Schüler entsprechend ein Malwettbewerb statt. Zusätzlich zu diesen Wettbewerben findet Jährlich ein Sportfest statt. Aufgrund der Absicht das Wissen über die Kultur zu erweitern werden auch Feste wie ,,Navarathiri“ (Neunnächte), Natthar (Weihnachten) oder Theipongal (Erntedank) gefeiert. Es sollten auch die Auftritte hier in Deutschland erwähnt werden bei der die Schüler ihr bisher gewonnenes Talent und Wissen zeigen können.

,,Die Bildung ist das einzig unvergängliche alles andere ist vergänglich.“




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றம்



சிவஅருள் சின்னத்தம்பி
தலைவர்



வசீகரன் பிரபாகரன்
உபதலைவர்



பாஸ்கரன் கந்தையா
செயலாளர்



விக்னேஸ்வரன் சுந்தரேஸ்வரன்
பொருளாளர்

## நிர்வாகிகளின் எண்ணத்துளிகள்...

30வது அகவையை அடைந்திருக்கும் ......

.....எசன் தமிழ்மொழிச்சேவை கலாசாரமன்றத்தை அரம்பித்தவர்கள் சிறந்ததோர் சிந்தனையை சிரசிலே ஏற்றி வளம்குன்றிய வேளையிலும் தரம் குன்றா செயலாற்றி வளர்த்தெடுத்து. பல நிர்வாகிகள் இம் மன்றத்தினை செவ்வனவே நிர்வகித்து. பல சிறப்புக்களைச் சேர்த்துள்ளனர். இவர்களின் அயராத உழைப்பும் உண்மையான உறுதியான செயல்பாடும் மன்றத்தின் அங்கத்துவர்களான பெற்றோர்களுடன் கொண்டிருந்த அணுகுமுறையும் கற்பிக்கும் ஆசான்களுடன் கொண்டிருந்த ஐக்கியமும் எதிர்கால விருட்சங்களின் மேல் கொண்டிருந்த அக்கறையுமே மன்றத்தினை இவ் உயர்வுவரை ஏற்றிவைத்துள்ளது என்பது மிகையாகாது. இம் மன்றத்தினால் நடாத்தப்படும் தமிழ்ப்பாடசாலையிலும் கலைவகுப்புக்களிலும் கற்பித்த ஆசிரியர்களிடம் கல்விகற்ற மாணவர்களே சிறந்த ஒழுக்கசீலர்களாகவும் உயர்ந்த கல்வியறிவு பெற்ற மேதாவிகளாகவும் மேன்மையான பதவிகளை வகிக்கும் பல அற்றல் பெற்ற விற்பனர்களாகவும் மிளிர்வது கண்கூடு. எம் இனத்திற்கு பல அரிய பணிகளை அரங்கேற்றிய இம் மன்றத்தின் நிர்வாகிகளாக நாமும் பொறுப்புக்களை ஏற்றிருப்பது பெருமகிழ்ச்சியை தருகின்றது. மன்றத்தின் அரம்பகர்த்தாக்கள்திரு.திருமதி வேலாயுதம் தம்பதிகளின் முன்னிலையில் இருபதாவது அகவைக்கு விழாவெடுத்து முப்பதாவது அகவைக்கும் விழாவெடுப்பது நமக்குகிடைத்த அரும் பெரும் பேறாகவே கருதுகின்றோம்.

ஒற்றுமையும் மனஉறுதியும் கொண்ட முன்னைய.இன்றைய பெற்றோரின் செயல்பாடுகளும் போற்றுதற்குரியது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உறுதிமொழியுடன் சிறந்ததோர் சமுதாயத்தை உருவாக்கப்பாடுபடுவோம். எம் அடையாளமான தாய்மொழியாம் தமிழையும் தமிழுயர் பண்பாடு கலாசாரத்தையும் பேணுவோம் என உறுதிகொண்டு தொடருவோம்.....

**வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!**



ஜெயதேவன் ஆறுமுகம்
செயற்குழு உறுப்பினர்



சிறிதரன் சுப்பிரமணியம்
செயற்குழு உறுப்பினர்



முரளிதரன் ஆறுமுகம்
செயற்குழு உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் வாழ்த்து



திருமதி சிவசிறி ஜெயதேவன்



திருமதி சாந்தினி துரையரங்கன்



திருமதி லதா ஜெயக்குமார்



திருமதி சியாமளா சச்சிதானந்தம்



திருமதி லக்ஸிகா தவக்குமார்



திருமதி சுகந்தி ரவீந்திரன்



செல்வி பிரிஸ்ரியா பாஸ்கரன்



திரு சிவஅருள் சின்னத்தம்பி



திரு வசீகரன் பிரபாகரன்

ஒற்றுமையே உயர்வென்றோம்
பற்றோடு பணி செய்தோம்
தமிழுக்காய் கரம் சேர்த்தோம் – நாம்
தமிழரென்று தலை நிமிர்ந்தோம்.

முப்பது ஆண்டென்ன முழுநாளும் பயணிப்போம்
நிலைப்பது தமிழெனவே விதைத்தோம் தமிழ்ப் பயிரை
கற்பது பிள்ளைகள் தான் கண்டோம் கண்டோம்
தமிழ் அமுதம் உண்டவர் பலர் இங்கே
உரம் போட்டவரும் அதிகம் அதிகம் இங்கே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க வளர்க



1988இல் எங்களால் சிறிதாக தொடங்கப்பட்ட இந்த எசன் தமிழ் பாடசாலையும் தமிழ் மொழிச் சேவைக்கலாச்சார மன்றமும் தனது படிமுறை வளர்ச்சியில் 10ம் 15ம் 20ம் ஆண்டு நிறைவுகளையும் கொண்டாடி மூன்று தசாப்தங்களாய் ஊருணியாய் உதவி 30ம் ஆண்டு நிறைவையும் 03.11.2018 கொண்டாடுவதையிட்டு பெருமிதம் அடைகிறோம். இந்த நந்நாளைக் கொண்டாடும் எசன் தமிழ் பாடசாலை மாணவர்களுக்கும் அதன் ஆசிரியர்களுக்கும் அதனை நிர்வகிக்கும் எசன் தமிழ் மொழிச் சேவைக் கலாச்சார மன்றத்தினருக்கும் எமது உள்ளம் நிறைந்த பாராட்டுக்கள்.

உலகின் மூத்த மொழிகளுள் தமிழும் ஒன்று. செந்தமிழின் செழுமையையும் இனிமையையும் தொன்மையையும் சிறப்பும் கண்டு அதை செம்மொழி என்றும் செப்பினர். இயல் இசை நாடகம் என்ற முப்பிரிவுகளைக் கொண்டிருப்பதால் முத்தமிழ் என்ற சிறப்பையும் கொண்டது எம்மொழி. பழந்தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்த ஆய்வாளர்களும் அறிஞர்களும் அதனுள் புதைந்துள்ள அறிவுசார் நுண்கலைகளை வியந்து பாராட்டியுள்ளார்கள். இப்படியான ஒரு சிறந்த மொழியின் சொந்தக்காரர்கள் நாம். நம்மொழியை புகலிட நாடுகளில் பாடசாலைகள் அமைத்து நமது எதிர்கால சந்ததிக்கு புகட்ட முயலும் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள். இது நமது கடைமையுமாகும்.

அப்படியான ஒரு வரலாற்றுப்பணியை ஜேர்மனியில் எசன் தமிழ் மொழிச் சேவைக் கலாச்சார மன்றத்தின் எசன் தமிழ் பாடசாலை கடந்த முப்பது (30) ஆண்டுகளாக செய்துவருகிறது. இவ்வாறான நீண்ட வளர்ச்சிக்கு அன்றிலிருந்து இன்றுவரை உறுதியுடன் உழைத்து வரும் நல்ல உள்ளங்களையும் நாம் பாராட்டுகிறோம். ஆல்போல் தளிர்த்து அறுகு போல் வேரோடி நீள் புவியெங்கும் நின்று நிலைத்து நீண்டு வளர்க என்று வாழ்த்துகிறோம்.

திரு திருமதி வேலாயுதம்
(ஆரம்ப நிறுவனர்கள்)

132 Arundel Drive
South Harroow
Middelsex, HA2 8PP
Londen. UK

---

தமிழுக்காக உழைத்த அனைவருக்கும் வெற்றிமணியின் வாழ்த்துக்கள்!



யேர்மனியில் இன்று தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றம் - எசன் தமிழ்ப்பாடசாலை தனது 30 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது.
கடந்த 30 வருடத்தில் எத்தனை மாணவர்கள் இப்பாடசாலை மூலம் தமிழ் கற்றார்கள் என்பதற்கு ஒருபடி மேலாக, தமிழர் என்ற முகவரியை கண்டுகொண்டார்கள் என்று எண்ணும்போது மனம் ஆனந்தக்கூத்தாடுகின்றது, இத்தகைய சேவைகள் புரியும் நிறுவனங்களை கொண்டாத்தோன்றுகின்றது.

30 ஆண்டுகள் ஒரு பாடசாலை மற்றும் கலாச்சார மன்றம் தொடர்ந்து இயங்குவது என்றால் அது கடந்து வந்தபாதை வெறும் மலர்ப் படுக்கையாக இருந்திருக்க முடியாது. எனவே இங்கு மாணவர்கள் கற்றார்கள் என்பதுடன், நிர்வாகிகள், பெற்றோர்கள், இவர்களும் கற்றார்கள். அதாவது எவ்வாறு ஒரு கூட்டு முயற்சியை வெற்றிகரமாக நடத்துவது என்ற பெரும் கல்வியைக் கற்றுத் தெளிந்தார்கள்.
சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஒருவரை ஒருவர் மதித்து நடக்கு உயர் பண்பு, இவையாவற்றிலும் சிறப்புச் சித்தி பெற்ற பெற்றோரையும், நிர்வாகிகளையும், கல்விகற்று தமிழராக தலைநிமிர்ந்து நிற்கும் மாணவ சமுதாயத்தையும், அதற்காக உழைத்த ஆசிரியர்களையும், வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது.

என்றும் தமிழுடன்

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A
பிரதம ஆசிரியர் வெற்றிமணி,சிவத்தமிழ்
யேர்மனி 23.09.2018
Vettimaniy.Ltd.U.K
vettimaniy@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Grußwort**



Seit 30 Jahren setzt sich die *Tamilische Schule Essen* des *Tamilischen Sprachdienst und Kulturverein e.V.* für die interkulturelle Arbeit der in Essen und Umgebung lebenden Tamilen ein. Zu diesem großen Jubiläum gratuliere ich herzlich.

Die *Tamilische Schule Essen* ist gleichzeitig Forum und Treffpunkt für die hier lebenden Tamilen. Die kulturellen und gesellschaftlichen Veranstaltungen des *Tamilischen Sprachdienst und Kulturverein e.V.* geben uns immer wieder Gelegenheit, die Geschichte und Kultur der Tamilen besser verstehen zu lernen und fördert den Austausch zwischen unseren beiden Kulturen. Die Schule und der Verein sind wichtige Bausteine unserer weltoffenen Stadt.

Die Verantwortlichen des Vereins und die Lehrerinnen und Lehrer erhalten alte Traditionen und bieten viele Angebote für die insgesamt 110 Schülerinnen und Schüler an. Dazu zählen nicht nur Tanz- und Gesangsunterricht, sondern auch Sprach- und Malwettbewerbe.

Ich danke den Mitgliedern des *Tamilischen Sprachdienstes und Kulturvereins e.V.* für die wertvolle Arbeit im Verein und der Schule. Ich wünsche Ihnen weiterhin viel Freude an Ihrer Arbeit.

Mit freundlichen Grüßen

Ihr

Thomas Kufen

Oberbürgermeister der Stadt Essen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எசன் தமிழ்ப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும்



பாலர் பிரிவு 1
அக்ஷறா சிவமோகன்
அபிதா தவபாலன்
அபூர்விகா சாந்தரூபன்
அர்ஜீணன் ஜிதேந்திரா
அனுஷ்கா சிவமோகன்
சன்ஜித் செல்வரட்ணம்
சுருதிகா சுப்பிரமணியன்
தரோஸ் திருநாவுக்கரசு
நிருண் விஸ்ணுராஜா
லக்ஷனா தபேந்திரன்
லபிஷன் மணிராஜ்
வைஷ்ணன் விக்கினேஷ்வரன்

பாலர் பிரிவு 2
அனிஷ் யோசுவா ஜிதேந்திரா
ஆருஷ் பாலமுருகன்
கபில்ரா ஜோச்
கஜன் கேசவன்
சஜின் செல்வரட்ணம்
சஸ்வின் கருணாகரன்
தியாஷா கருணாகரன்
திவானி விஸ்ணுராஜா
றொபின் இஸ்ராயேல் மோகன்ராஜ்

பாலர் பிரிவு 3
அஞ்சனா அஜந்தன்
அட்ஷியா சாந்தரூபன்
ஓவியன் பாலசுந்தரம்
காவியா மகாலிங்கம்
சகானா இரகுநாதன்
சுஜிதா நவரட்ணராஜா
சௌமியா விஜிதராஜ்
நகுல் துரையரங்கன்
நிதுஷன் ஆசீர்வாதம்
லக்ஸ்மிகா முரளிதரன்
லஸ்மிகா சிவசுப்பிரமணியன்





ஆண்டு 1
அபிநயா அஜந்தன்
கிஷானி மணிராஜ்
சஞ்சியா செந்தூரன்
சரண்ஜித் சிற்சபேசன்
சீத்தா சுரேஸ்குமார்
தினுசன் ரவீந்திரன்
துவாரகா ஜெயகாந்திகரன்
ஷெறோஜ் பிரபாகரன்

ஆண்டு 2
அகிஷா சிவதாசன்
அனுசியா கேசவன்
ஆரபி நாகராஜா
நபிஷன் சுரேஸ்குமார்
நவீன் கனகசுந்தரராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எசன் தமிழ்ப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும்




**ஆண்டு 3**
அரவிந் மகாலிங்கம்
அனீஷா ஜெயக்குமார்
அனுசன் கேசவன்
அனுசா கேசவன்
அனுஸ்கா ராகவன்
சஜித்தா ஆசீர்வாதம்
நித்யா ரவீந்திரன்
பிரயவன் சுரேஸ்குமார்
ரிஷியந்ந் சிற்சபேசன்
வைஷ்னவிகா விஜிதராஜ்

**ஆண்டு 4**
சகானா லிங்கேஸ்வரன்
சாருகா ராகவன்
சிந்திகா சிவகுமார்
சுபேத்தா பிரபாகரன்
சுவென்யெ சிறீந்திரன்
சுஜித்தா பிரபாகரன்
டிலக்ஷனா விஜிதராஜ்
நீதினி தவக்குமார்
பிரவீன் தயாநிதி
மிலான் ஆரோக்கியநாதர்
யோசுவா பாலமுரளி
லதுசா நடராஜா





**ஆண்டு 5**
அஷ்வின் நாகராஜா
ஆருஜன் சிவதாசன்
சுவேத்தா வசீகரன்
செந்தூரதன் சிவக்குமார்
சௌமிகா முரளிதரன்
நிஷா ஆரோக்கியநாதர்



**ஆண்டு 6**
அகிஷா வேலுப்பிள்ளை
அபிஷேக் ஜெயக்குமார்
ஆர்த்திகா ராஜேந்திரன்
சகானா பிரபாகரன்
சௌமியா நாகராஜா
பானுஜன் விக்னேஷ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியத் தமிழ் வானொலி | அகரம்

Po. Box 4153
59037 Hamm
Deutschland

Telefon: 02381 95 66 09
Telefax: 02381 95 66 10

ETR

Web: www.etr.fm
Email: info@etr.fm

அகமகிழ்வு வாழ்த்து



அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்

பாரதியாரின் பாடலுக்கிணங்க முப்பது ஆண்டு தமிழ்கல்வியை வழங்கிவரும் எசன் தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றத்தினரை மனதாரபாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

த. இரவீந்திரன்
(நிர்வாக இயக்குநர்)

---

வானுயர வாழ்த்துகிறோம்..



அகவை முப்பதின் ஆலமரவிருட்சம்
அன்னைத்தமிழில் வேரூன்றிய உச்சம்
அடுத்ததலைமுறைக்கு தாய்மொழியே வெளிச்சம்
அர்ப்பணமாய் ஆற்றும்பணி ஆயுளுக்கும் நிலைக்கும்

அகரமென பதியமிட்ட தமிழ்மொழிச்சேவை கலாச்சாரமன்றம்
எஸ்ஸென் மாநகர கம்பீரமிடுக்கு
புலத்திலே தாய்மொழியை பூக்கவைத்த மிடுக்கும்
குன்றிலே விளக்காக ஏற்றிவைத்த மகுடம்

திரு திருமதி - வேலாயுதம் ஏற்றி வைத்த தீபம்
அணையாது அகவை முப்பதில் முழுமதியாய் திகழும்
தமிழ்மொழியும் கலைவளமும் விளையாட்டும்
திறமைகளின் உச்சம்
பண்பாடு கலாச்சாரம் விழுமியங்கள் வேரூன்றி நிலைக்கும்
சீர்திருத்தம் சீருடைகள் சிறப்பான கல்விமுறை ஒழுக்கம்
போட்டிகளும் பரிசில்களும் வெற்றிகளும் ஆளுமையைச் செதுக்கும்
வளர்மதியில் வலம்புரியாய் கல்விச்சேவை உயரும்

அறுவடையில் பயன்பெற்று ஆசானாய் துறைகண்டோர் சான்று
ஆலமரவிருட்சத்தின் அடித்தளமே அகவை முப்பதில் இன்று
பாடுபட்டு பாதுகாத்து நிமிர்வுதரும் மிடுக்கில்
தினம் உழைக்கும் நிர்வாகக்கட்டுகோர்ப்பு வளமும்
இசைந்து போகும் ஆசான்கள்-பெற்றோர்கள்-மாணவர்கள்-இமயம்

வலிசுமந்து வலுப்பெற்ற தமிழ்மொழிச்சேவை கலாச்சாரமன்றம்
தாய்மொழியின் தலைநிமிர்கோபுரத்தின் கலசம்
வழிமொழிந்து வாழ்த்துகிறோம் வானுயர்வீர் குன்றில்
வற்றாத் தமிழ்ப்பற்றை தினம் பாய்ச்சி நின்றீர்
வையத்தில் உம்பணிக்கு ஈடுநிகர் செப்போம்
வாழ்த்துகிறோம் வணங்குகிறோம் வளரட்டும் தொண்டு.

தவமலர் கல்விராஜன்
(முன்னாள் ஆசிரியர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 வருடங்கள் திறமாக செயற்பட்டு இன்று ஆண்டு விழா கொண்டாடும் எசன் தமிழ்ப்பாடசாலைக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!



இன்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னர் திரு திருமதி வேலாயுதம் தம்பதிகள் தமிழ்ப்பாடசாலையை ஆரம்பிக்கும் போது யாப்பின் மொழிபெயர்ப்பு மற்றும் பதிவு செய்யும் விடயமாக எனது சேவையையும் நாடினர். அப்போது இது ஓர் குறுகிய காலச் செயற்பாடுதான் என எனது மனதில் நினைத்தேன். அப்போது நான் அவரைப் பார்த்து ஏன் உங்களுக்கு இந்த வேலை என்று கேட்டேன். 30 வருடங்களுக்கு முன்னர் வீடுகளிலும் டொச் மொழியைத்தான் பேசுங்கள் என்று சிறுவர்பாடசாலைகளிலும் ஆரம்ப பாடசாலைகளிலும் பேசிய காலமது. அன்று எனது கேள்விக்குத் திரு வேலாயுதம் அவர்கள் "நம்முன்னோர் நமக்குக் கற்றுத்தந்த தமிழை நாம் நமது எதிர்காலத்துக்கு சிறார்களுக்குக் கொடுக்க வேண்டாமா" என்றார். என்னை அது கண்கலங்க வைத்தது. எனது 4 பெரிய பிள்ளைகளை அங்கு அனுப்பி தமிழ் கற்க வைக்க முடியவில்லை. அந்த நாட்களில் எனக்கு அதன் பெறுமதி தெரிந்தும் வசதிகள் இருந்தும் என்னால் அதை சாத்தியப்படுத்த முடியவில்லை. பலவிடயத்தில் வெற்றிபெற்ற நான் இந்த விடயத்தில் தோல்வியைக் கண்டேன். எனது பெரிய பிள்ளைகளும் இப்போ தமக்குத் தமிழ் தெரியாது என மிகவும் கவலைப்படுகிறார்கள். தற்போது கலாநிதிப்பட்டத்துக்கு கற்கும் அவர்கள் முன்னைய காலத்தில் "யாருக்கு இந்த தமிழ் தேவை? இதனால் என்ன பிரயோசனம்?" என்று கேட்டனர். இப்போதெல்லாம் "நாங்கள் சிறுபிள்ளையாக இருந்து அப்படி கூறினால் நீங்கள் தானே அப்பா எம்மைத் தமிழ் படிக்கக் கட்டாயப்படுத்தியிருக்க வேண்டும்" என குறைகூறுகின்றனர். எனக்கு இது வேதனையாக இருக்கின்றது. ஆகவே இந்தப்பிழையை வேறு எவரும் விடக்கூடாது என்பதற்காகவே இங்கு எழுதுகிறேன்.

எனது 5வது பிள்ளையை பல கடினங்களுக்கும் மத்தியில் இந்த பாடசாலையில் தமிழ் கற்பதற்காக சேர்த்துள்ளேன். அங்கு எனது பிள்ளை கற்கும் திறனும் சொல்வளமும் என்னை அதிசயப்பட வைக்கிறது. இதற்காக அயராது எவ்வித பயனும் எதிர்பாராது உழைக்கும் ஆசிரியைகள், ஆசிரியர்கள், இயக்குனர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் பரீட்சிக்கும் நடுவர்கள் எல்லோருக்கும் எனது இதயம் நிறைந்த பாராட்டுக்கள். உங்கள் இந்த அருமையான சேவைக்கு முன் நான் தலை குனிகிறேன்.

இங்கு தமிழ் கற்ற 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்று மாஸ்டர் பட்டங்களும் வைத்தியர்கள் பொறியியலாளர்களுமாக வேலை செய்யும் போது அங்கு தேவைப்படின் எவ்வித கலப்படமும் இல்லாமல் தமிழ் பேசுவதும் அதை எழுதுவதும் அவர்களின் திறமையை எடுத்துக் காட்டுகின்றது. இன்று யேர்மனியில் 140 வித்தியாசமான பாசை பேசும் மக்கள் வாழ்கின்றனர். அநேகமானோர் தமக்கென பாடசாலை கட்டித் தமது தாய்மொழியைக் கற்பிக்கின்றனர். அரசாங்க உதவிகளும் பெறுகின்றனர். தமிழர்கள் மட்டுமே எவ்வித அரசாங்க உதவியும் இல்லாது தமது சக்தியிலேயே இயங்குகின்றனர் என்பது பெருமைக்குரிய விடயம். "தமிழா நீ தமிழன் என்று தலைநிமிர்ந்து நில்"

உங்கள் உண்மையுள்ள
இரகுநாதன்
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்.

---

அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



பள்ளி என்பது குழந்தைகளுக்குப் பாடம் மட்டும் போதிப்பதாக இருக்கக் கூடாது. குழந்தைகளின் தனிப்பட்ட திறன்களை வெளிக்கொணர்வதே அதன் செயற்பாடாக இருக்கவேண்டும். அந்தவகையில் எசன் தமிழ்ப் பாடசாலையானது அந்நகரில் உள்ள தமிழ் புலம்பெயர் குழந்தைகளுக்கு தமிழ்மொழிக்கல்வியைப் போதிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களின் பேச்சு கட்டுரை ஓவியம் மற்றும் விளையாட்டு ஆர்வங்களைத் தூண்டி அவர்கள் முன்னேற தங்களை உலகிற்கு வெளிப்படுத்த அத்துணை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுக்கின்றது. கடந்த முப்பது ஆண்டுகளாக இப்பணியை செவ்வனே செய்து தமிழறிவும் கலாசார ஆர்வமும் நிறைந்த இளையோரை உருவாக்கியிருக்கின்றது. அவர்களில் சிலர் இங்கு வளர்ந்தாலும் நாட்டுப்பற்று மொழிப்பற்று உடையோராய் தன்னம்பிக்கையுடன் இப்பாடசாலையில் கடமையாற்றுவதை நான் அவதானித்துள்ளேன். நம் அடுத்த தலைமுறையினர் நமது அடையாளத்தை அழியாமல் பாதுகாப்பார்கள் என்ற எண்ணத்தை இது விதைத்துள்ளது. இப்படியாக போற்றுதலுக்குரிய பலபணிகளை புரியும் எசன் தமிழ்ப்பாடசாலை மேலும் பல முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு மென்மேலும் வளர மெசடே வல்பேர்க தமிழ்ப்பாடசாலை சார்பில் எனது உளம் நிறைந்த வளமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. செந்தில்வாணி. சிவரட்ணராஜா
நிர்வாகி மெசடே வல்பேர்க தமிழ்ப்பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எசன் தமிழ்ப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும்



**ஆண்டு 7**
கஜானி நவரட்ணராஜா
சாதனா சச்சிதானந்தம்
பிரணவன் சுரேஸ்குமார்
லவன்யா லிங்கேஸ்வரன்
வினுஷா கருணாகரன்

**ஆண்டு 8**
காரணி பிரபாகரன்
விதுர்ஷன் சிற்சபேசன்
வினோஜன் விக்னேஷ்வரன்

**ஆண்டு 9**
காரணன் பிரபாகரன்
கேஸ்ரின் கேதாரணி பாலசுந்தரம்
பவித்திரா பிரபாகரன்
யசீக்கா சிவபாலன்
வனோஷ் வசீகரன்
விவீனா சிறிதரன்





**ஆண்டு 10**
அபிநயா ஜெயக்குமார்
பிருத்திகா சிவஞானம்
குருபரன் விக்னேஸ்வரன்
மகரேஸ் பிரபாகரன்
மதுமிக்கா முரளிதரன்
சாருஜா சச்சிதானந்தம்
தர்சிகன் தவக்குமார்

**ஆண்டு 11**
கஜந்தா நவரட்ணராஜா
மதுமிதா நந்தகுமாரன்
சாயகி சிவஅருள்
சாமினா சிவதாஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோட்முண்ட் மாநகரில்....

# தமிழர் அரங்கம் கல்விக்கூடம்



## யேர்மன் மொழி வகுப்புக்கள்


அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது.
யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு
நல்லதோர் அரிய வாய்ப்பு

(புதிய வகுப்புக்கள் ஜனவரியில் ஆரம்பம்)



## பரதநாட்டிய வகுப்புக்கள்

டோட்முண்ட் மற்றும் ஒபகவுசனில் நகரங்களில்
நடைபெறுகின்றன.




## தமிழ்மொழி வகுப்புக்கள்

தமிழ் மொழி வகுப்புக்கள் இலவசம்!
ஐரோப்பாவில் பிறந்த தமிழ் மொழியைக்
கற்காத வளர்ந்த பிள்ளைகளுக்கும்
பிரத்தியேக முறையில் பயிற்றுவிக்கப்படும்.



**Rheinische str. 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33 ☎ 0231 95097900**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tamilisches Katholisches Seelsorgeamt - Deutschland
**தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - யேர்மனி**

Pa. NirubanTarsicius
Tamilen Seelsorger
Laurentiusberg 1
45276 Essen

Tel: 0201-4397602
Fax: 0201-4397603
Mobil: 017662142184
E-Mail: tniruban21@gmail.com
germantamil.chap@gmail.com

## வாழ்த்திதழ்

17.09.18 – யேர்மனி

எம் நாட்டின் போரினால் எம்மக்கள் சிதைவுற்று புலம் பெயர்ந்தபோது சிதைந்தது எம் வாழ்வு என்றே நினைத்தோம். அழிந்தது எம் மொழி என நவின்றோம். ஆனால் கடந்து வந்த காலம் எம் மொழியினைக் காத்து வந்ததெனின் எம்தமிழ்க் கல்வியே அதன் காரணம் எனத் தெளிய முடியும். மனம் உவந்து எம் தமிழக் கல்விதனை அளிக்க முன்வந்த ஆசிரியர்களுக்கு தலைசாய்கின்றேன். நன்றி என்னும் மூன்றெழுத்தில் அவர்கள் பணிதனை அடக்கிவிட முடியாத அளவிற்கு அவர்தம் பணி பெரிது. அதுவே இன்றும் தமிழ் இப்புலம்பெயர் நாட்டடில் தமிழ் வாழ வழி சமைத்தது எனில் மிகையாகாது.

தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றம் எசன் தமிழ்ப் பாடசாலை 03.11.18 அன்று தனது 30 ஆண்டு பணிதனில் நிறைவு கொண்டு விழாக்காண்கின்றது. நும் பணியில் தமிழ்வளர எம் மொழிசிறக்க ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிருவாகிகள், மாணவர்கள் ஆகியோர்க்கு சிரம் தாழ்கின்றேன். எமது பண்பாட்டினையும் அன்பையும் தாம் வாழும் நாட்டிற்கும் அளித்து மற்றவர்க்கு மதிப்பளிக்கும் தன்மயிலும் சிறப்புறச் செய்து எம் தமிழ்மொழியும் வாழ்வும் மதிப்புயர மொழி அறிவும் மொழிப்பற்றும் தாயக உணர்வும் கொண்ட எழுச்சிநிலை சிறந்து நிலைக்க எசன் தமிழ்ப் பள்ளியினை வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

அருட்திரு நிருபன் தாசீர்சியஸ்
தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் - யேர்மனி

---

## தமிழ் மொழி சிறப்புற களம் அமைத்தோர் வாழ்க!



தமிழ் மக்கள் 30 ஆண்டிற்கு முன் யேர்மனி நாட்டில் புலம் பெயர்ந்தபோதும் தமது இக்கட்டான சூழ்நிலையிலும் தமிழ்மொழியினை வளர்த்தெடுக்கவென ஆர்வத்துடன் தொடங்கிய தமிழ்மொழிச் சேவை கலாச்சாரமன்றம் இன்று எசன் மாநகரில் பெருவிருட்சமாக 30 ஆண்டுகளை நிறைவு செய்து பல்லாயிரம் மாணவர்களை மொழித்திறன் காணவைத்து தொடர்ந்து தனது சேவையை ஆற்றிவரும் கலாச்சார மன்றத்தை வாழ்க பல்லாண்டு என வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"ஊடகவித்தகர்" பண்ணாகம் திரு.இ.க.கிருஸ்ணமூர்த்தி ஆகிய நான் கடந்த சில ஆண்டுகளாக இப்பாடசாலை மாணவர்களின் பரீட்சையின்போது நடுவராக கடமையாற்றி அவர்களின் மொழித்திறனுடன் மாணவர்களின் பேச்சுத்திறன் மிக மிக உயர்வாக மேம்பட்டிருப்பதைக்கண்டு வியந்திருக்கிறேன் ஒவ்வொருமாணவர்களும் ஒவ்வொரு தனித்தனித் திறமைமிக்கவர்களாக பட்டை தீட்டி தமிழ்ச் சமூகத்தில் உயர்வு செய்ய முனைப்புடன் செயற்பட்ட கலாச்சார மன்ற நிர்வாகத்தினர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டி தொடர்ந்தும் இதேபோன்று வளமுடன் தொடர வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**"தன் மொழி உயர தன் இனம் உயரும்"**

வாழ்க தமிழ்!! வாழ்க கலாச்சார மன்றம்!! வாழ்க தமிழ்மக்கள்!!

அன்புடன் வாழ்த்துக்கள் வழங்கும்
பண்ணாகம் இணைய பிரதமஆசிரியர்
"ஊடகவித்தகர்" திரு.இ.க.கிருஸ்ணமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசன் தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம்

தமிழ்க்கல்வி, கலைகலாச்சார, விளையாட்டு நிகழ்வுகளில் சாதனை புரிந்த முப்பது வருடங்களின் வாழ்த்தாக…...



இப்போது என்பதுபோல் இருக்கிறது. நானும் இதன் தாபகர் திரு.வேலாயுதம் அவர்களும், எசன் விளையாட்டுமைதானம் ஒன்றில் இருந்து கதைத்தது. இந்த சந்திப்பும் எதிர்பாராமல் நடந்ததுதான். அப்போதுதான் இந்தப்பாடசாலையை தான், அவசியம் கருதி உருவாக்கி இருப்பதாகவும் ஆர்வமுடன் பிள்ளைகள் தமிழைக்கற்கிறார்கள் என்றும் வருடம்தோறும் நடைபெறும். போட்டி நிகழ்வுகளில் நடுவராகப்பங்கு பற்றி உதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

அறிவியுங்கள் முடிந்தால் வருகிறேன் என்று சொன்னவன் தான். சிலவருடங்கள் தவிர்த்து இன்றுவரை, இந்தப்பாடசாலையில் சங்கமித்துக்கொண்டேன் என்பதே உண்மையாகும். பாடசாலையை உருவாக்கி இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற எமது பிள்ளைகளுக்கு தமிழ்க் கல்வியைக் கற்பிக்க வேண்டுமென்று நினைத்துச் செயல்பட்ட திரு. திருமதி வேலாயுதம், ஈஸ்வரி தம்பதிகளை மறக்க முடியாது. அவர்களுக்கே எனது இந்த வாழ்த்து முதலில் போய்ச்சேர வேண்டுமென்று நினைக்கிறேன். அதுவே அனைவரது விருப்பமாகவும் இருக்கும்.

அவர்கள் தற்போது லண்டனில் வாழ்ந்தாலும் அவர்களது எண்ணங்கள் எப்போதும் இந்தப்பாடசாலையைப்பற்றியேதான் என்பதை நானறிவேன். படித்த மாணவர்களும், படிக்கின்ற மாணவர்களும் இனி படிக்கப்போகின்ற மாணவர்களும் சரி இவர்களை மறந்து விடக்கூடாது என்பதே எனது விருப்பம். இது பெற்றோர்களுக்கும் நிர்வாகத்தினர்க்கும் நான் அன்போடு விடுக்கும் வேண்டுகோளாகும்.

அடுத்த வருடம் எப்போது வரும் இநதப்பாடசாலையின் மழலைச் செல்வங்களின் மழலையைக்கேட்கலாம் என்று எதிர்பார்ப்போடு நாமும் காத்திருப்போம். எங்களையும் சொந்தங்களாக நினைத்துக்காத்திருக்கும் பெற்றோர்களையும், நிர்வாகத்தினரையும் அன்போடு நினைவு கூருகின்றேன். அதிசிறந்த மாணவர்களை இந்தப்பாடசாலை உருவாக்கியிருக்கிறது. அதற்காகச்செயல்பட்ட ஆசிரியத்தெய்வங்களை நினைத்துக் கொள்ளுவோம் என்றும்.

சிறந்த முறையில் செயல்பட்டு வழி நடாத்திச்செல்லும் நிர்வாகத்தினரையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. சில தலைவர்களை இந்தப் பாடசாலை கண்டிருக்கிறது. திரு வேலாயுதம் அவர்களுக்குப்பின். நானறிந்து திரு இராசேந்திரம் அவர்கள் இன்றைய தலைவர் திரு சிவஅருள் அவர்கள். சிரித்துச்சிரித்து நிர்வாகத்தை நடாத்துவதில் கைதேர்ந்தவர் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். தமிழ்க்கல்வியுடன் கலாச்சார விளையாட்டு நிகழ்வுகளை நடாத்திசிறப்புப்பெற்ற இப்பாடசாலை மேலும் புகழ்பெறவேண்டும். மாணவர்கள் விரும்பும் வகையில் மொழியை இலகுவாக்கி முன்னெடுத்துச்செல்வதன் மூலம் இன்னும் சாதிக்க முடியும் என்பதே எனது கருத்தாகும். ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி இருக்கும் இப்பாடசாலை மேலும் சிறப்புப்பெற வளர்ச்சிபெற இதயபூர்வமான வாழ்த்துக்கள். என்னோடு நடுவர்களாகக்கலந்து செயல்பட்டுவரும் அனைத்து நடுவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். பலவருடங்களாக என்னோடு இணைந்து நடுவராகக் கடமைபுரிந்து வரும் எனது மனைவி திருமதி ராதா புத்திசிகாமணி அவர்களின் வாழ்த்தாகவும் இது அமைகின்றது.

நன்றி.
வாழ்க தமிழ் வளர்க! எசன் தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றம்
என்றும் அக்கறையுள்ள
பொன்.புத்திசிகாமணி
ராதா புத்திசிகாமணி. சுண்டன் 24.09.2018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dolmetscher- und Fachübersetzungsbüro

**RAGUNATHAN**

Alle Sprachen und Fachgebiete

Ayadurai Ragunathan (BDÜ)

Allgem. beeidigter Dolmetscher
und ermächtigter Übersetzer für die tamilische Sprache


**பதிவுசெய்யப்பட்ட மொழிபெயர்ப்பாளர்**

எமது அலுவலகத்தில் எல்லாப் பாஷைகளிலும்
எல்லாவிடயங்களுக்கும் மொழிபெயர்ப்பு செய்து கொடுக்கப்படும்.
மருத்துவம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், நீதி, நிதி சான்றிதழ்கள்....

தமிழ், டொச், ஆங்கிலம், சிங்களம், பிரெஞ்சு, ஸ்பானிஸ், டெனிஸ்,
நோர்வேகிஸ் மற்றும் பல.. மொழிபெயர்த்துத்தரப்படும்.

Limburgstraße 7
45467 Mülheim an der Ruhr
E-Mail: Ragunathan.Dolm@t-online.de

Telefon (0208) 77 71 575
(0208) 99 04 77
Telefax (0208) 99 04 79
Mobil-Tel. 0171 8912269




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழிச்சேவை கலாசாரமன்ற இசை வகுப்பு



என் உயிர் தமிழுக்கு,
இசைப்பணி செய்கெவன என்னையும் என் மாணவ செல்வங்களையும் ஆளாக்கிய எசன் தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றம் 30ம் ஆண்டினை போல் ஓர் நூற்றாண்டு காண எனது மனம் நிறைந்த வாழ்த்துகள்.
மன்ற இசை ஆசிரியர் மீரா நித்தியானந்தம்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
**V. S. Radhakrishnan (M.P)**
අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
**State Minister of Education**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எமது இல.<br>My No. | MOE/SM/2018/LP/543 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2018.10. |

**இலங்கையின் இராஜாங்க கல்வி அமைச்சரும் மலையக மக்கள் முன்னணி கட்சியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி**

ஜெர்மன் மாநகரில் இயங்கி வருகின்ற தமிழ் மொழி கலாசார அமைப்பின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வெளியிடும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்களது கலை கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் மிகவும் உயர்வாக பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதற்கு இந்த தமிழ் மொழி கலாசார அமைப்பு போன்ற அமைப்புகளின் பிரதான காரணமான இருக்கின்றன. முற்றிலும் மாறுபட்ட கலாசாரங்களைக் கொண்ட ஜெர்மன் மாநகரிலே புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையே மட்டுமல்லாது அங்கு வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களது கலை கலாசார விழுமியங்களை நமது எதிர்கால சந்ததியினர் அறிந்து அவற்றைப் பேணி பாதுகாக்கும் பொறிமுறையை மிகவும் கவனமாக இவ்வமைப்பு செய்து வருகின்றது.

அந்த வகையிலே இவ்வமைப்பின் கடந்தகால வெற்றிக்கு அதன் நிர்வாக சபை உறுப்பினர்கள் காரணமாக இருக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது எனவே அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.

எதிர்காலத்தில் அவர்கள் இதனை விடவும் மேலும் உத்வேகத்துடன் தமது பணியை முன்னெடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதோடு இந்நிறுவனத்தின் விழாவானது பல நூற்றாண்டுகள் தாண்டியும் மேலானதாக கடந்து செல்ல வேண்டும் என்று எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் (பா.உ)**
இராஜாங்க கல்வி அமைச்சர் மற்றும் மலையக மக்கள் முன்னணி
இலங்கை

Dr. V. Radhakrishnan (M.P.)
State Minister of Education
Ministry of Education
4th Floor "Isurupaya"
Battaramulla.

Ministry of Education. 4th floor, "Isurupaya" Battaramulla, Colombo, Sri Lanka.
රාජ්‍ය අමාත්‍ය / இராஜாங்க அமைச்சர் / State Minister: +94 11 2 784 836 (Ext. 1414)
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: +94 11 2 785 449
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail: v.radhakishnan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
## INTERNATIONAI MOVEMENT FOR TAMIL CULTURE

Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registered Tamil Cultural Organization - Est. in 1974

Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel. 1 647 829 4044 email: rujo@utsginc.com
www.imtcweb.com



தமிழ் மொழிச்வேை கலாசார மன்றம் எசன் தமிழ்ப் பாடசாலை தனது 30வது ஆண்டு நிறைவில் மகிழ்வு பெறுவதையிட்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பெருமகிழ்வு கொள்கிறது. இன்று தனது 30வது ஆண்டில் மகிழ்வுறும் தமிழ் மொழிச்வேை கலாசார மன்றம் எசன் தமிழ்ப் பாடசாலை நிர்வாகம் தனது சிறப்பான செயற்பாட்டடின் மூலம் நிறை வளர்ச்சியை கண்டுள்ளது கண்கூடு.


“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்என்ப வாழும் உயிர்க்கு”

எனும் குறளுக்கொப்ப எண் எழுத்து ஆகிய கலைகளை புலம்பெயர்ந்து எம் மொழிக்காக ஏங்கி நின்ற எம் மக்களுக்களித்து இன்று வளரந்தெழுந்து நிற்பது பாராட்டுக்குரியதொன்றே.

புலம் பெயர் நாட்டில் எம் மொழி வாழ தங்கள் உடல் உளம் நிறைந்தளித்து பணிசெய்த ஒவ்வொருஉள்ளங்களுக்கும் சிரம் தாழ்கின்றோம். தாங்கள் மேலும் வளர்ந்து உயர்ந்து சிறப்புற்று எம்தமிழ்ப் பணி காண வாழ்த்துகின்றோம்.

அன்புடன்



யேர்மன்கிளைத் தலைவர், அகிலகிளைகளின் ஒருங்கிணைப்பாளர்-கனடா

---

மனம் நிறைவான வாழ்த்துக்கள்



முப்பது ஆண்டுகள் புலம் பெயர்மண்ணில் நமது சிறார்களின் தமிழ்வளர்ச்சிக்காக உழைத்து அரை நூற்றாண்டை நோக்கி நகர்வதில் மகிழ்ந்திருக்கும் அத்தனை உயர்வான உள்ளங்களுக்கும் எனது இதயம் நிறைவான பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

எசன் மாநகரில் இப்பணியை ஆரம்பித்து வைத்த அதன் மூலகர்த்தா மதிப்பிற்குரிய திரு வேலாயுதம் ஆசிரியர் அவர்கள் தன்னம்பிக்கையுடன், தன்னலமின்றி ஆரம்பித்த இக்கல்விவிருட்சம் பல பண்பான அன்பர்களின் உழைப்பினால் மேலும் வளர்ச்சிபெற்று 30 ஆண்டுகளைத் தொடர்ந்து வளர்ச்சிபெறுவது காண்பதில் மிக்க மகிழ்ச்சி.

இன்று வரை இந்த உயரிய பணியை பல சிரமங்கள் மத்தியிலும் ஊக்கத்துடன் செயற்படுத்தும் நிர்வாகிகள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். உங்கள் பணி சிறந்திட மேலும் பல வாழ்த்துக்கள்.

கல்விச்சேவையினால் பயன் பெற்று உயர்ந்திட்ட பழைய மாணவர்கள், பலர் அவர்களைத் தொடர்ந்துவரும் எதிர்காலச் சந்ததியினரை வழிநடத்திச் செல்கின்ற பண்பும் மிக மிக உயர்ந்த பண்பாடாகும்,

“பல நூல் படித்த நீ அறியும் கல்வி
பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்
இவை அவைத்திலுமே இருப்பதுதான் தெய்வம் ”

என்கின்ற எனக்குப் பிடித்த சினிமா பாடல்வரிகளின் செயற்ப்பாட்டை இந்தக் கல்விச்சேவையில் காண்பதில் மிக்க மகிழ்ச்சி.

எசன் தமிழ்மொழிச்சேவையின் பணி மென்மேலும் வளர்ச்சிபெற்றிட இறையருள் வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

வாழ்க தமிழ்!

என்றும் அன்புடன் கி. பரிமளராஜா (முன்னாள் ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழிச்சேவை கலாசாரமன்ற நடன வகுப்பு



தாயை நினைப்பது போல் தமிழை நினைத்த வேளையில் தயக்கம் இன்றி வாருங்கள் தமிழ் கற்பியுங்கள் என்று அழைத்து தமிழோடு கலை வளர்பதற்கு தளம் இட்டு தந்த திரு திருமதி வேலாயுதம் அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் எமது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.
எம் குழந்தைகளுக்கு எமக்கு தெரிந்த வித்தைகளை கொடுப்பதே எமது எண்ணம். அதற்கு ஏற்ற இடமாக விளங்குகின்ற இப்பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகள் தாண்டி தன் சேவையை செய்து எம் இனத்தின் அடையாளமாக விளங்க வேண்டும் என்ற என் எண்ணமதை பதிவிட்டு வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"கலையின்பமே நிலையின்பம்."
மன்ற நடன ஆசிரியர்
திருமதி சாந்தினி துரையரங்கன்
கனகசபை கலாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மண்" கல்வி,கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை

(பதிவு இலக்கம் VR 3947 - ஆரம்பம் 1990)

"Mann" (Erde) Magazine – Germany

Am Wind hövel – 18a 47249-Duisburg - Germany

**வாழ்த்தி மகிழ்கிறோம்!....**



வெள்ளிவிழா கடந்து (30) முப்பதாவது ஆண்டு நிறைவுவிழா காணும் ஜேர்மனி – எசன் நகர தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றத்தை வாழ்த்தி மகிழ்கிறோம். தமிழர் புலம்பெயர் வாழ்வில் ஐரோப்பிய நாடுகளை வந்தடைந்தபோது தாய்மொழித்தாகம் கொண்டு, எதிர்காலச் சந்ததிகளின் கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடு, விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்க முற்பட்டு இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஆலமராமாய் நிழல்கொடுத்து, பழம்கொடுத்துப் பல நூற்றுக்கணக்கான தமிழ்ச் சிறார்களின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு உழைத்துவரும் இம்மன்றத்தின் சேவை பாராட்டுதலுக்குரியதே.

இப்பாடசாலையின் ஆரம்பகர்த்தாவும் எனது நண்பருமான திரு வேலாயுதமும் அவர்தம் பாரியார் ஈஸ்வரி அவர்களும் இப்பாடசாலையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அத்திவாரம் இட்ட பெரியவர்களாவர். அவர்களை இச்சந்தர்ப்பத்தில் போற்றுகின்றோம். தொடர்ந்து இப்பாடசாலையை இவ்வளவு காலமும் இயக்கி இன்று முப்பதாவது ஆண்டுவிழாவைக் காணவைத்த அனைத்து நிர்வாகிகளையும் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் மாணவமணிகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர், மாணவர், பெற்றோர், நிர்வாகிகள் என அனைவரின் ஒற்றுமை, முயற்சி, உழைப்பு, விட்டுக்கொடுப்பு, என அனைத்தும் நல்வழியில் பயணித்தபடியால்தான் இந்தப் பாடசாலை யேர்மனியிலேயே ஒரு முன்மாதிரியான பாடசாலையாகவும் மிகக்கூடுதலாக மாணவ மணிகள் கல்வி பயிலும் பாடசாலையாகவும் திகழ்கின்றது. இது உலகத் தமிழர் வரலாற்றில் பதியப்படுகின்றது.

கல்விதான் தமிழர்களின் உயிர்மூச்சாக இருந்துவருவதாகும். கல்வி கற்றவருக்கு உலகமெல்லாம் புகழ்தான். கல்வி கல்லாதவரை முகத்தில் இரண்டு புண் உள்ளவர்கள் என வள்ளுவப் பெருந்தகை எடுத்தியம்புகிறார். கள்வரால் கொள்ளையிடமுடியாதது. காற்றால் நீரால், நெருப்பால் அழிக்கமுடியாததும் இந்தக் கல்விதான். ஒரு மனிதனின் அனைத்துச் செல்வங்கள், சொத்துக்களைவிட இந்தக் கல்வியே உயர்ந்தது. அப்படியாக மனித வாழ்வில் முன்னணி வகிக்கும் கல்விச் செல்வத்தைப் பேணி வளர்த்து வருங்காலச் சந்ததிகளுக்குப் புகட்டிவரும் இப்பாடசாலையின் ஆசிரியர்கள் பெற்றோர்களைத் தலைவணங்கி வாழ்த்துகிறோம். முப்பது ஆண்டுகளாகக் கல்விச்செல்வத்தைப் பெற்ற, பெற்றுவரும் மாணவமணிகள் கல்வியில் உயர்ந்து அடுத்த தலைமுறைக்குத் தமிழைக் கொண்டுசெல்ல வேண்டும் என ஆசைப்பட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 29 வருடங்களாக ஜேர்மனியில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஒரே ஒரு சஞ்சிகை என்றால் அது எமது "மண்" சஞ்சிகைதான். இந்தச் சஞ்சிகையின் பல ஆண்டு விழாக்களில் இப்பாடசாலையின் மாணவர்கள் பல போட்டிகளில் வெற்றிபெற்றுப் பரிசில்களையும் பெற்ற பெருமை இந்த எசன் தமிழ்ப்பாடசாலைக்கு உண்டு. அவை மட்டுமல்லாமல் கலை, கலாச்சாரம், நாடகம், நடனம் எனப் பலதரப்பட்ட நிகழ்சிகளும் மண் சஞ்சிகை விழாக்களில் மேடை ஏற்றிப் பாராட்டைப் பெற்ற பல சம்பவங்களையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவதுடன் முத்தமிழைப் போற்றி வளர்த்துவரும் இப்பாடசாலையானது நூறாண்டுகள் கடந்து தமிழ்ப்பணி ஆற்றும் என நம்பிக்கையோடு வாழ்த்தி மகிழ்கிறோம்.

பல போட்டிகள், நெருக்கடிகள் வந்தபோதும் இப்பாடசாலையானது எல்லாவற்றையும் புறந்தள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒற்றுமையோடு வெற்றிநடை போட்டுவருவதை நாம் அறிவோம். இப்பாடசலையை வளர்த்தெடுக்கும் அரும்பணியில் ஈடுபட்டுவரும் அனைத்துத் தரப்பினரையும் மண் சஞ்சிகையின் ஆசிரியர், வாசகர்கள் எழுத்தாளர்கள் சார்பில் இதயபூர்வமான வாழ்த்துக்களைப் பகிர்ந்து நிற்கின்றோம்!...

**நன்றியுடன்...**
**வ.சிவராசா**
**பிரதம ஆசிரியர்**
**மண் கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை – ஜேர்மனி – 17.09.2018**
**தொலைபேசி- 0049 203 8073898 Email v.sivarajah@arcor.de**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பாளர் வேலும்மயிலும் இராமகிருஸ்ணன் (சிறி) அவர்கள் வாழ்த்துச்செய்தி.



எசன் தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றத்தின் தமிழ்ப்பாடசாலையின் ஆரம்பகர்த்தாவாகிய திரு வேலாயுதம் அவர்களை நான் இந்த இடத்தில் நினைவில் நிறுத்த வேண்டிய தேவையுள்ளது. திரு வேலாயுதம் அவர்கள் என்னுடன் 1985ம் ஆண்டு யேர்மனிக்கு வந்தார். Nürenberg நகரில் இருந்து அந்தவருடமே Essen நகரத்திற்கு வந்தோம். எசன் நகரில் அந்த காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சிறுவர் சிறுமியர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு அவர்களிற்கு தம் வீட்டில் வைத்தே தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளைப் போதித்தனர். மாணவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க 1988ம் ஆண்டு இவர்கள் தமிழ்ப் பாடசாலையாக உருவெடுத்தது. எமது ஊரின் மிகச்சிறந்த தமிழ் அறிஞரான கந்தமுருகேசனாரின் தமிழ்ச்சேவையை யேர்மனியில் தொடர்ந்தும் நடாத்த உருவாக்கப்பட்ட இந்தப் பாடசாலையே யேர்மனியில் எம்மவரால் உருவாக்கப்பட்ட முதல் தமிழ்ப் பாடசாலை என்பதனைப் பார்த்து நாம் எல்லோரும் பெருமிதம் கொள்ளலாம்.

கடந்த 30 ஆண்டுகளில் இந்தப்பாடசாலையானது பல தலைமுறைகளை உருவாக்கியதுடன் இப்பாடசாலையில் பல தமிழ் பயின்றவர்கள் தற்போது அருந்தமிழைப் பேசுகின்றனர். தற்போது இந்தப்பாடசாலைக்கும் மன்றத்திற்கும்பொறுப்பாக உள்ள நண்பர் சிவஅருள் அவர்கள் தன்னலமின்றி மிகவிருவிருப்புடன் இந்தப் பாடசாலையை திறம்பட நடாத்தி வருகின்றார். அதேசமயம் இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு முதுகெலும்புபோல் நின்று உதவும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் சேவையானது அளப்பரியது என்பதையும் குறிப்பிடவேண்டும். இந்தப் பாடசாலையானது தொடர்ந்தும் இதே வேகத்துடன் நடைபெற எனது ஆசிகளை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

அன்பின் வேலும்மயிலும் இராமகிருஸ்ணன்

---

## தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் எசன்

அறநெறித் தமிழ்ப்பாடசாலை, நுண்கலைக்கல்லூரி ,அம்மன் தியானப்பெருங்கோவில் எசன்.

***Tamilischer Kultur und Wohlfahrtsverein Essen e.V.***
***Am Ringofen.21, 45355 Essen.Tel:0201/3307524***
***E-Mail: wijayan@live.de***

**தமிழ் போல் தழைத்தோங்குக !!!**



எசன் தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா 03.11.2018 அன்று நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.
புலம்பெயர் தேசத்தில், தாய்மொழிக்கல்வியையும், கலைகளையும் அடுத்த சந்ததிக்குப் பாரப்படுத்தும் பணியில் 30 ஆண்டுகளாக ஈடுபட்டுவரும் தங்கள் பணி தெய்வீகமானது.சாதனைக்குரியது.எழுத்தறிவித்தவன் இறைவனாவான்.
பலநூறு மாணவர்களுக்கு தாய்மொழி தமிழைக் கற்றுத்தரும் பணியில் நீங்கள் சிறப்புப் பெற்றுத், தொடர்ந்து பல சாதனைகள் படைக்க எல்லாம் வல்ல நயினை நாகபூஷணியை வேண்டுகின்றேன்.
மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியப்பெருந்தகைகள், நிர்வாகிகள் அனைவருக்கும் எமது நுண்கலைகல்லூரி, அறநெறித்தமிழ்ப்பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் சார்பில் இதயங்கனிந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!!

வாழ்க தமிழ், வளர்க தமிழர் கலைகள்.

தமிழால் ஒன்றிணைவோம்

தமிழவேள், திரு.திருமதி.நயினை விஜயன்.
பொறுப்பாளர், தமிழர் கலாச்சார நற்பணிமன்றம்,
எசன் நுண்கலைக்கல்லூரி-அறநெறித் தமிழ்ப்பாடசாலை.எசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 வருடங்களில் எசன் தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றத்துடன் பயணித்தவர் பலபேர்
அதில் எமக்கு கிடைத்த சில மன்ற அங்கத்தவர்களின் முகங்கள்...இன்னும் தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோஸ்ற் தமிழ்க் கல்வி - கலாசார அமைப்பு
Tamilischer Schul- und Kulturverein Soest e.V.
Indu Raveenthra Theivendram (Vorsitzende)
Postfach 2226; 59482 Soest
02921 74 719 - indu.tsk@gmail.com
www.tsk-soest.com

வாழ்த்துரை



அமுதே தமிழே அழகிய மொழியே எனதுயிரே என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க எமது வாழ்வில் இணைந்து உயிர்மூச்சாகத் திகழும் அரும்தமிழைப் பருகுவதற்கு புலம்பெயர் தமிழினம் பல இன்னல்களைக் கடந்து இயந்திரமான வாழ்க்கை போராட்டத்தின் மத்தியிலும், தாய்மொழிப்பற்றின் அசையாத தாகத்திலும் எதிர்கால சந்ததியினர் தலைநிமிந்து தமிழனாய் வாழவேண்டுமென்ற நோக்கில் தமிழ்மொழி, கலை பண்பாடு சமயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆங்காங்கே தமிழ்ப்பாடசாலைகள், தமிழர் கலைவிழாக்கள், ஆலயங்கள் என நிறுவி மாணவ மாணவிகள் தமிழிலும் கலை இலக்கிய மேதைகளாக மிளிர வைத்திருப்பது பெருமிதம் கொள்ள வைக்கிறது.

அந்தவகையில் எசன் மாநகரில் தமிழ் மொழிச் சேவை கலாசாரமன்றத்தை திரு. திருமதி வேலாயுதம் அவர்களால் உருவாக்கி உன்னதமான நிலையில் இயங்கும் இப்பாடசாலையில் தமிழ்மொழி அறிவையும், விளையாட்டு, கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் வெற்றிகண்டுள்ளனர்.

ஆயிரம் தடைக்கற்கள் வந்த போதும் அனைத்தையும் படிக்கற்களாக மாற்றி, வெற்றிப் பாதையில் பயணித்து முப்பது ஆண்டு நிறைவைக்கொண்டாடும் இன்நன்நாளில் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் நற்பணிகளை வாழ்த்தி நிற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம் இவர்கள் நல் முயற்சிகள் தொடரவும் வளர்ந்துவரும் தலைமுறையினரும் இச்சேவையால் பயன் பெற்று நாம் தமிழர் என தலைநிமிர்ந்து நிற்கவும், தமிழும் கலையும் அறவழியில் வாழ, வாழ்த்தி, தங்கள் பணியானது வானளவில் உயர்ந்து பல சகாப்தங்களை காண வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

உங்கள் பணி வளர்க! முத்தமிழே வாழ்க!

தெய்வேந்திரம் இந்து
அதிபர், ஆசிரியர், சோஸ்ற் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பு

---

அன்புடையீர்,



எசன் தமிழ்ப்பாடசாலை தனது முற்பதாவது ஆண்டு சேவையை நிறைவு செய்யும் வகையில் அதை ஒரு பெருவிழாவாக எடுத்து கொண்டாட முன்வந்தமையை எண்ணி நாமெல்லோரும் புளகாகிதம் அடைந்துள்ளோம்.

புலம்பெயர்ந்து மேற்கத்திய நாடுகளில் புகலிடம் தேடி வந்துள்ள தமிழ் சமூகத்தினராகிய நாம் மாற்றினத்தவருடன் கலந்து வாழவேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளோம். இந்த நிலையில் எங்களை இனம் கண்டுகொள்வதற்கு, குறிப்பாக எங்கள் சிறார்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு தேவையானது எங்கள் தாய்மொழி, அது தான் தமிழ் மொழி. இதை நன்குணர்ந்து எசன் நகரில் வாழும் தமிழ்ப்பிள்ளைகளுக்கு தமிழ் மொழி மற்றும் எங்கள் கலை கலாச்சாரம் போன்றவற்றை புகட்டும் நோக்கத்துடன் இந்த தமிழ்ப்பாடசாலையை நிறுவியுள்ளார்கள். முதற்கண் இதை ஸ்தாபித்த ஆசான்கள் திரு.வேலாயுதம் மற்றும் அவர் பாரியார் இருவர்களையும் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

இத்தனை வருடங்கள் இப்பாடசாலைப்பணியை அதன் தரம் குன்றாமல் திறன் படவும் கட்டுப்கோர்ப்புடனும் நடாத்தி வரும் நிர்வாகத்தினரினதும் மற்றும் அப்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரிய ஆசிரியைகளினதும் சேவை மிக அளப்பரியது. இக்கல்விப்பணி இதோடு முடிவடையாமல் இன்னும் எண்ணற்ற அகவைகள் கண்டு, எங்கள் எசன் வாழ் வருங்கால தமிழ்ச் சந்ததியினர் பயன்பெற வேண்டி உளமார வாழ்த்துகிறேன்.

து.வேதவியாசர்

(ஆங்கில ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ
சாம்பசிவ. ஸ்ரீதரக்குருக்கள்
ஸ்ரீ கதிர்வேலாயுதஸ்வாமி ஆலயம் எசன்
ஆலயகுரு



Sivasri
Sambasiva. Sritharakurukkal
Sri Kathirvelauthaswamy Temple e.V
Hindu Priester
Telefon: 0049 1713150877
E-Mail: s.sritharan@hotmail.de

வாழ்த்துச்செய்தி...

அன்பர்களுக்கு வணக்கம்,




